காட்சியளிக்கும்படி செய்தல், இதனை ஊக்குவிப்பதற்காக தனியார் தொழில் துறை உரிமையாளர்கள், மீன் வளர்ப்பதற்கு ஊக்கம் அளிப்பதோடு, அலங்கார மீன் வகைகளையும் வளர்க்கும் இந்த மீன் காட்சியகம் ஊக்குவிக்கின்ற இந்த முக்கியமான காரணங்களை மையமாக வைத்து வருகின்ற நிதியாண்டினிலே மீண்டும் நிதிநிலைக் குழுவினிலே இதனை முன்வைத்து இதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

236—

மைலம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்

38108*—திரு. சா. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டிவனம் வட்டம், மைலம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : அரசு ஆணை எம்.எஸ்.*585*, கல்வி, நாள் *14–7–94*-ன்படி, *1994–95* கல்வியாண்டில் திண்டிவனம் கல்வி மாவட்டம் மைலம் ஒன்றியத்தில் புலியனூர் கிராமத்தில் உள்ள துவக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

239—

சென்னையில் புதிய பேருந்து நிலையங்கள் அமைத்தல்

9919*—திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—